மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

# வீரசோழியம் ஒரு பயிற்றுமுறை இலக்கணமா?

முனைவர் அ. ஹெப்சி ரோஸ் மேரி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கேரளப்பல்கலைக்கழகம். திருவனந்தபுரம்

தொல்காப்பியம் தோன்றி ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு தோன்றிய நூலே வீரசோழியம். இது ஐந்திலக்கண வரலாற்றில் சிறப்பிடம் பெறத்தக்கது. ஐந்திலக்கண மரபில் எழுந்த முதல் நூல். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் எழுதப்படும் இலக்கணம் அக்கால மொழியமைப்பை விளக்கிக் கூறவேண்டும் மொழியில் காலவோட்டத்தில் விளைந்துள்ள மாற்றங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்னும் கருத்துக்களை மனதில் கொண்டு புத்தமித்திரனார் அக்கால மொழிப் பண்பினை விளக்கக்கூடிய சிறந்த இலக்கணப் பெட்டகமாக இதை அமைத்துள்ளார். வடமொழி இலக்கணக் கோட்பாடுகளையும் கலைச்சொற்களையும் தழுவிக்கொண்டமை, வடமொழி முதலிய பிறமொழிகளில் இருந்து வந்து வழங்கும் வழக்குகளை உணர்ந்திருந்தமை தொல்காப்பியருக்குப் பிறகு தமிழ்மொழியில் ஏற்பட்ட வளர்ச்சியையும் மாற்றங்களையும் உணர்ந்து இலக்கணம் வகுத்துள்ளமை, தமிழ் இலக்கண மரபுகளிலிருந்து வேறுபட்டு புதுமுறைகளில் இலக்கணம் அமைத்தமை போன்றவற்றை வீரசோழியத்தின் சிறப்பியல்பிகளாகச் சொல்லலாம். அதுமட்டுமல்லாமல் வீரசோழியம் அக்காலத்தில் ஒரு பயிற்றுமுறை இலக்கணமாகவே அமைந்தது. நூல் முழுக்க ஆங்காங்கு பல கல்விச்சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரை வீரசோழியம் தோன்றிய காலத்தில் இது பயிற்றுமுறை இலக்கணமாக இருந்ததா? இல்லையா? என்பதை ஆய்வு செய்கிறது.

**வீரசோழியம்- பயிற்றுமுறை இலக்கணமா?**

மரபிலக்கணங்கள் பொதுவாக மொழியை அணுவணுவாக விளக்கும் தன்மையுடையன. இன்று நமக்குக் கிடைக்கும் நூல்களில் தலையாயது தொல்காப்பியம்.

தொல்காப்பியம் எழுதப்பட்டதன் நோக்கம் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் தொல்காப்பிய மரபைப் பின்பற்றி எழுதப்பட்ட பிற்கால வழி நூல்கள் அனைத்தும் தமிழ் இலக்கண நோக்கத்தைப் பாயிரத்தில் குறித்துச் செல்கின்றன. தொல்காப்பியத்தின் நூலமைப்பையும் இலக்கணக் கூறுகளின் வருணனை முறையையும் ஆராய்ந்து பார்க்கும்போது, தொல்காப்பியம் சிறந்தவொரு வருணனை இலக்கணமாகவும் விதிமுறை இலக்கணமாகவும் விளங்குகிறது.

தொல்காப்பியத்தைப் போலவே வீரசோழியமும் விதிமுறை இலக்கணமாகும். இதில் தமிழ் இலக்கண வருணனையும் வடமொழி இலக்கண வருணனையும் இவ்விலக்கணத்தில் இடம் பெறுகின்றன. இவ்விருமொழி வருணனைகள் மூலமாக வருணனைப் பண்புக்கு மேலாக ஒப்புமைப் பண்புகளையும் வீரசோழியர் தம் இலக்கணத்தில் போற்றியுள்ளார். இவ்விரு பண்புகளையும் இலக்ணத்தின் நோக்கங்களாக,

நாமேவு எழுத்துச் சொல் பொருள் யாப்பு அலங்காரம் எனும்
பாமேவு பஞ்ச அதிகாரமாம்பரப்பைச் சுருக்கி
’.......................உரைப்பன் வடநூரன் மரபும் புகன்று கொண்டே ( வீ. சோ. பா 3)

என்று பாயிரத்தில் வெளிப்படையாக வீரசோழியர் கூறுகிறார். எழுத்து , சொல், பொருள், யாப்பு , அணி என்னும் ஐந்து அதிகாரப் பரப்பின் வருணனையைச் சுருக்கி வடமொழி இலக்கண மரபைத் தமிழிலக்கண மரபுக்கு இணையாக வைத்துக் காண்பதே தம் நோக்கமாகக்கொண்டுள்ளார் என்பதை இப்பாயிரப்பாடல் மூலம் அறியலாம். முற்றிலும் புதுமையான முறையில் இலக்கணம் ஒன்றைப் புத்தமித்திரனார் இயற்றியதற்கான நோக்கம் பற்றி ச.வே சுப்பிரமணியன், தெ.பொ.மீ, செ.வை சண்முகம், விஜயவேணுகோபால், சு.இராஜாராம் போன்ற அறிஞர்கள் பலவிதமாகக் கருத்துரைப்பர். தமிழருக்குத் தமிழ்மொழி இலக்கணம் உணர்த்தும் நோக்கம் இன்றி வடமொழி வல்லோரின் பிறமொழி விருப்பத்தைத் தமிழ் மொழியறிவு பெறும் விருப்பை நிறைவு செய்யும்பொருட்டு புத்தமித்திரனார் இதனைப் படைத்துத் தந்தாரோ என எண்ண வேண்டியுள்ளதாக ச.வே. சுப்பிரமணியன் கூறுகிறார். (1977:13)

**செ.வை. சண்முகம் இதற்கு மறுப்பாகச் சில கருத்துக்களைக் கூறுகிறார்.**

1. வடமொழியாளருக்குத் தமிழ் கற்பிப்பதுதான் நோக்கம் என்றால் அந்த இலக்கணத்தில் வடமொழி அமைப்பையும் ( காரகப்பதம் வடமொழித்தொகை) வடமொழிக் கலைச்சொற்களையும் தனியே கூறும் சூத்திரங்களை அமைத்திருக்க வேண்டாம்.

2. பாயிரத்தில் வடநூல் மரபு கூறுவதாகக் குறிப்பிட்டுள்ளாரேதவிர வடமொழிவாணர்க்காக இலக்கணம் இயற்றியதாகக் குறிப்பிடவில்லை.

3. அலங்காரப்படலம் என்று அமைத்து

.......................அலங்காரங்கள் தண்டி சொன்ன
கரைமலி நூலின் படியே உரைப்பன் (வீ.சோ.141)

என்று கூறுவதால் வடமொழியாளர் வடமொழியிலுள்ள காவிய தரிசனத்தைத் தமிழ்மொழி மூலம் படிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது புத்தமித்திரனாரை நாம் தவறாக எடை போடும்படி செய்துவிடும்.

4. மேலும் வடமொழியாளர் தமிழ் படிக்க இலக்கணம் எழுதுவதானால் வட மொழியில் தமிழ் இலக்கணத்தை எழுதியிருக்க வேண்டும். ஐரோப்பியர்கள் தங்கள் நாட்டாருக்கு இலக்கணம் எழுதியபோது அந்தக் காலப் பொது மொழியான லத்தீனிலும், அவரவர் தாய்மொழியான போர்ச்சுக்கீஸ், ஜெர்மன், பிரெஞ்சு முதலிய மொழிகளிலும்தான் எழுதினார்கள். வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கம் எழுதினார் என்றால் அவர் தங்கள் நாட்டவர்க்கு முதலில் லத்தீன் மொழியில் செந்தமிழ், கொடுந்தமிழ் என்ற இலக்கணம் எழுதிய பிறகு நல்ல தமிழ்ப் புலமை ஏற்பட்டபிறகு தொன்னூல் விளக்கம் எழுதினார். அதிலும் தமிழில் உள்ள பிற இலக்கணக் கருத்துக்களையும் சூத்திரங்களையும் பயன்படுத்திக் கொண்டார்.

5. வீரசோழியத்தின் மொழி நடை எளிமையானதாக இல்லை. தமிழைத் தாய்மொழியாக உடையவர்களே இலக்கண இலக்கியக் கல்வி பெற்றிருந்தும், உரை உதவியால்தான் படித்துப் புரிந்து கொள்ள முடியும். எனவே புத்தமித்திரனார் வடமொழியாளர் தமிழ் படிக்க வீரசோழியத்தை இயற்றினார் என்பது பொருத்தமாக இல்லை என்றும் சுருக்கிச் சொல்லவும் வடநூல் மரபைப் புகுத்துவதுமே அவர் நோக்கமாக இருக்க வேண்டும் என்று செ.வை. சண்முகம் கூறுகிறார். (1980:46)

விஜயவேணுகோபல் தமிழ் எழுத்து, சொல், பொருள் யாப்பு, அலங்கரம் எனும் ஐந்து பகுதிகளிலும் வடமொழி இலக்கண மரபுகளை எங்ஙனம் பயன்படுத்திப் புரிந்து கொள்ளலாம் என்ற வகையில் அமைந்த முதல் முயற்சி என்று கூறுவதால் தமிழறிஞர்களுக்கு வடமொழி மரபை உணர்த்த எழுதப்பட்ட நூலென வீரசோழியத்தைச் சுட்டுகிறார் (1985:35). வீரசோழியக் கோட்பாடு என்ற நூலில் சு. இராஜாராம் இடைக்காலத்தில் வடமொழி, பிராகிருதம் போன்ற மொழிகளில் வழக்கிலிருந்தபடி இந்நூல் புடைமாற்று இலக்கணமாக எழுதப்பட்டுள்ளது என்று கருத்துரைப்பார். சோழர் காலத்தில் நிலவிய இருமொழிச் சூழல் உயர்கல்வி, சமயம், தத்துவ, ஆட்சியமைப்பின் உயர்மட்டம் முதலியவற்றால் வடமொழி பெற்றிருந்த இடம் இவை காரணமாகத் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் கற்க உதவும் வகையில் வீரசோழியம் எழுதியிருக்கலாம் என்பது அவர் கருத்து. கி நாச்சிமுத்து வீரசோழியம் செம்பதிப்பு என்ற தம் கட்டுரையில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், வடமொழியை முதலில் கற்றுப் பின் தமிழைக் கற்கப் புகும்போது உதவத்தக்கவகையில் வீரசோழியம் இயற்றப்பட்டிருக்கலாம். இன்று ஆங்கிலம் கற்றபின் தமிழ் கற்கப் புகும் தமிழர்கள் நிலையை இத்துடன் ஒத்து நோக்கலாம். அல்லது வடமொழியை அறிந்த தமிழ் பேசத் தெரிந்தவர்களுக்கு இலக்கியத் தமிழ் அல்லது எழுத்துத் தமிழை உணர்த்த இது இயற்றப்பட்டிருக்கலாம் என வீரசோழியம் எழுந்த நோக்கத்தைக் குறிப்பிடுகிறார். (வீரசோழியம்- செம்பதிப்பு:126)

வீரசோழியத்தை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது தமிழ் இலக்கண மரபும் வடமொழி இலக்கண மரபும் விரவிக் கிடப்பதைக் காணலாம். எழுத்துக்களைக் கூறும் முறையில் வடமொழி இலக்கண மரபும் தமிழ் இலக்கண மரபும் விரவிக் கிடக்கின்றன. தத்திதப் படலத்தில் வடமொழி தத்திதாந்தச் சொற்களும், கிரியாபதப்படலத்தில் தமிழ் வடமொழி வினையமைப்பு விளக்கப்பட்டுள்ளதையும் காணலாம். மேலும் வீரசோழிய நடை கடினமானதாக அமைவதால் தமிழ் தெரிந்தவர்களுக்கு மட்டுமே இதனைக் கற்க முடியும். மட்டுமல்லாமல் வீரசோழிய நூலாசிரியர் வடமொழிக் கலைச்சொற்களால் சமாசம் எனத் தொகைகளுக்குப் பெயர் சூட்டுகிறார். வீரசோழியரின் தொகைப்படலத்தில் காணும் காரிகைகள் வடமொழியில் வரருசியின் காரிகைகளின் மொழிபெயர்ப்பு போல உள்ளன என்கிறார் சாஸ்திரியார் (1997:209) . வீரசோழியர் வடமொழி இலக்கண மரபையொட்டி இலக்கணம் அமத்தமையால் முதலாவது வடமொழிச் சமாசங்களையும் அவற்றின் வகைகளையும் விளக்கி (45-49) இறுதியில் தமிழ்த் தொகைநிலைத் தொடர்களையும் அவற்றுள் பண்புத்தொகை உம்மைத்தொகையின் வகைகளையும் குறிப்பிடுகிறார்.

இதனைப் பார்க்கும்போது வீரசோழியம் வடமொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ் தெரிந்த மாணவர்களுக்காக அல்லது தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட வடமொழி தெரிந்த மாணவர்களுக்காக எழுதப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

**வீரசோழியத்தில் கல்வியியல் சிந்தனைகள்**

வீரசோழியம் எழுதப்பட்ட காலகட்டத்தில் ஒரு பயிற்றுமுறை இலக்கணமாகத் திகழ்ந்தது. மாணவர்களை மனதில்கொண்டே இந்நூல் இயற்றப்பட்டது என்பதை அகச்சான்றுகளால் நிறுவலாம். சான்றாக, வடமொழியில் வியாகரணம் என்பது சொல்லிலக்கணத்தையே குறிக்கும். வடமொழி இலக்கண மரபைத் தழுவி இலக்கணம் அமைத்த புத்தமித்திரனார், சந்திப்படலம் என்னும் இயலை அமைத்து எழுத்துக்களின் வகை தொகைகளை முதலில் குறிப்பிடுகிறார். அடுத்தபடியாகப் புணர்ச்சியில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது திரிபுகளைக் கூறி அடுத்து ஒவ்வொரு எழுத்துக்களும் தம்முள் புணரும்போது எவ்வாறு மாறுபடுகிறது என்பதை விளக்குகிறார். இதனை அடுத்து எழுத்துக்களால் ஆகிய சொற்களை விளக்கிச் செல்கிறார். வீரசோழியத்தின் இயலமைப்பைப் பார்க்கும்போது மாணவர்களுக்காகவே இந்நூல் இயற்றப்பட்டது என்பது புலனாகும்.

வீரசோழியர் பல இடங்களில் மாணவர்களின் மனநிலையை நன்கு உணர்ந்தே இலக்கணம் அமைத்துள்ளார். மாணவர்கள் பொதுவாக எளிமையையும் சுருக்கத்தையுமே விரும்புவர். அதனை மனதில்கொண்டே வேற்றுமை இலக்கணம் அமைத்துள்ளார் எனத் தோன்றுகிறது. சான்றாகத் தொல்காப்பியர் இரண்டாம் வேற்றுமையின் பொருள் நிலைகளாக இருபத்தெட்டினைச் சுட்டுகிறார். ஆனால் புத்தமித்திரனார் பற்றுக்கருமம், வீட்டுக்கருமம், இருபுறக்கருமம், தான் தெரிகருமம், தான் தெரியாக் கருமம் கருத்தாக் கருமம், தீபகக் கருமம் என்ற எட்டனை மட்டுமே சுட்டுகிறார்.

மேலும் வேற்றுமையின் பொருள் நிலைகளை மாணவர்கள் அளிதில் புரிந்து கொள்ளும்வகையில் அமைத்துள்ளார். எடுத்துக்காட்டாகக் கருவிப் பொருள் வேற்றுமையான மூன்றாம் வேற்றுமை அகக்கரணம், புறக்கரணம் என்னும் இரண்டு பொருளில் வரும். அதாவது தன் உறுப்புகளாக அமைந்த கருவி அகக்கரணம் என்றும் (கண்ணினால் கண்டான்) தன்னின் வேறான கருவி (கோடாலியால் வெட்டினான்) புறக்கரணம் என்றும் குறிப்பிடுகிறார். அதேப்போன்று ஐந்தாம் வேற்றுமை அசலம், சலம் என்னும் பொருளில் வரும் அதாவது இவை முறையே இயக்கம் இல்லாதது (ஊரினின்று போனான்) இயக்கமுடையது (குதிரையினின்று விழுந்தான்) என்னும் பொருளில் வரும் என்று குறிப்பிடுகிறார். தமிழ் மொழியில் வினைச்சொற்கள் வினையடி, இடை நிலை, சாரியை, விகுதி என்ற அமைப்பைக் கொண்டதாக அமைகின்றன. தமிழ் இலக்கண உலகில் நன்னூலார் தான் இம்முறையில் வெளிப்படையாகப் பகுபத இலக்கணம் கூறியவர். இவர் பகுபத உறுப்புக்களாகப் பகுதி, விகுதி, இடை நிலை, சாரியை, சந்தி விகாரம் ( நன் 133) என்ற ஆறையும் சுட்டுகிறார்.

(எ.டு) நடந்தனன் - நட ந் (த்) அன் அன்

நன்னூலுக்கு முன்னதாகவே வீரசோழியம் தாது பிரத்தியம் என்ற முறையில் வினைச்சொற்களை விளக்கியுள்ளது. பிரத்தியத்தில் கால இடை நிலைகளும் விகுதிகளும் அடங்கும்.

(எ. டு) போவான் - போவான்

தாது பிரத்தியம்

இப்பாகுபாடு இலக்கணம் பயிலும் மாணவர்கள் வினைச்சொல் அமைப்பை எளிதில் புரிந்து கொள்வதற்கு உதவும் என்று இத்தகைய பாகுபாட்டினடிப்படையில் வினைச் சொற்களை அமைத்துள்ளார் எனத் தோன்றுகிறது. வீரசோழியத்தை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது இது அக்காலத்தில் வடமொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ்தெரிந்த மாணவர்களுக்காக அல்லது தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட வடமொழி தெரிந்த மாணவர்களுக்காக் எழுதப்பட்டது என்பது புலனாகுகிறது. மேலும் வீரசோழியத்தின் இயலமைப்பு வேற்றுமை இலக்கணம், வினை அமைப்பு, தொகை இலக்கணம் இவை அமைக்கும் முறைகளிலெல்லாம் மாணவர்களையும் அவர்களது மனநிலையையும் மனதில்கொண்டே இவ்விலக்கணம் படைக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை.

**துணை நூல்பட்டியல்**


1. அருணாச்சலம். மு, தமிழ் இலக்கியவ்ரலாறு, 9,10 நூற்றாண்டு, பாரி நிலையம், சென்னை, 1975.
2. அறவாணன்.க.ப, சைனரின் தமிழ் இலக்கண நன்கொடை, ஜைன நற்பணி மன்றம் 1974.
3. அறவேந்தன். இரா, தமிழ் சிங்கள இலக்கண உறவு, திருவரசு வெளியீடு- 1999.
4. கோபாலையர், வீரசோழியம், பெருந்தேவனார் இயற்றிய உரை, திருச்சி, 2005.
5. சண்முகம் செ.வை, வீரசோழியம் மொழியியல் ஆய்வு, அனைத்திந்திய தமிழ்மொழி கழகம், அண்ணாமலை நகர் 1990.
6. இராஜாராம் சு, வீரசோழிய இலக்கணக் கோட்பாடு, இராகவேந்திரா, நாகர்கோவில் 1992.